முருகப்பெருமான் துணை

**மகான் விளையாட்டுச்சித்தர் அருளிய அறிவுரை ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**03.09.2023**, ஞாயிற்றுக்கிழமை

1. ஞானத்தலைவன் அவதாரமான
   ஞானியே ஆறுமுக அரங்கனே
   தானதரும பலம்தனை பெருக்கி
   தரணிகாக்க வந்த தேசிகனே
2. தேசிகனே உன் பெருமை கூறி
   தெரிவிப்பேன் அறிவுரை ஆசி
   ஆசிதனை சோபகிருது யாளிதிங்கள்
   அறிவிக்க மூவைவீர் திகதி கதிர் வாரம்
   (சோபகிருது வருடம் ஆவணி மாதம் 17 ம் நாள், 03.09.2023, ஞாயிற்றுக்கிழமை)
3. வாரமதில் விளையாட்டுச்சித்தர் யானும்
   வழங்குவேன் உலகோர் நலம்பெற
   சோரமில்லா ஞான வாழ்வுகாண
   சுத்தநெறி வழிகாட்டி அருளும்
4. அருளும் அரங்கமகா ஞானியரின்
   ஆற்றல்மிக்க தரும சேவைதனை
   வரமாக உலகமக்கள் ஏற்று
   வணங்கி உலகமெல்லாம் செய்துவர
5. வருகவே புண்ணிய பலம் கூடிட
   வையகம் பெருமாற்றம் தன்னை
   தருமத்தாலேயே அடையக் கூடும்
   தன்னார்வத் தொண்டுமிக்க சீடர்களை
6. சீடர்களை அரங்கமகான் ஆசிபட
   செகமெல்லாம் ஞானிகள் படைத்து
   இடர்களை வெல்லும் வண்ணமாக
   எல்லா மாற்றமும் உலகினில் நடக்கும்

7. நடக்கவே அரங்கமகான் வாழ்
ஞானக்குடிலை அனுகியே
இடர்வெல்லும் அருளமுது உண்டு
இனிதே அரங்கனிடம் தீட்சை ஏற்று
8. ஏற்றுமே செபதபங்கள் செய்து
எந்நாளும் ஞானிகள் பூசையை
ஆற்றல்பட செய்து கொண்டு
அறிவிப்பேன் தொடர்ந்து வர
9. வருகவே அவரவர் வினைகள்
வளரா அகன்று மேவி
தருமமோடு தயவு குணமும் பெருகி
தவராசன் கருணை பெற்றவர்களாக
10. ஆகவே மாற்றம் தேற்றம் கண்டு
அனைவரும் ஞானவான்களாக
வகைபட உலகை மாற்றுகின்ற
வள்ளலாக ஞானிகளாக தேறுவர்
11. தேறவே உலகம் எங்கிலும்
தெய்வீக ஞான ஆட்சிக் காலமாக
மாறுதல் உலகே அடையும்
மொழிந்திட்ட அறிவுரை ஆசி முற்றே

—சுபம்—